மாண்புமிகு திரு. துரைமுருகன்: *பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறே செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

பாதாள சாக்கடைத் திட்டம்

***2763—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அதிராம்பட்டினம் பேரூராட்சி தற்போது நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதிராம்பட்டினம் நகராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கின்படி 31,066 ஆகும். தற்போதைய மக்கள்தொகை 34,172 ஆகும். இந்நகராட்சியில் 49.82 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளும் 7.80 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன; மேலும், 7,226 குடியிருப்புகளும் உள்ளன. பாதாள சாக்கடைத்

2022 ஜனவரி 6]

திட்டம் அல்லது கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தினை அமைப்பதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைக்கேற்ப, அதிராம்பட்டினம் பேரூராட்சி, நகராட்சியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மையின மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய இந்தப் பகுதி, கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. சாக்கடை நீர் தெருக்களிலும், சாலைகளிலும் ஓடக்கூடிய ஒரு சூழல் அங்கு இருக்கிற காரணத்தினால், அந்தப் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிற அந்த அடிப்படையில், சிறப்பு முன்னுரிமை தந்து விரைவிலேயே அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கான வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறோம். கிட்டத்தட்ட 25–க்கும் மேற்பட்ட புதிய நகராட்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அனுமதித்திருக்கிறார்கள். இதிலே ஒவ்வொரு நகராட்சிக்கும் தேவையான மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வடிகால்கள், கழிவறை வசதிகள், விளக்கு வசதிகள் ஆகிய அனைத்து வசதிகளையும் செய்து தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசால் பேரூராட்சி, நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிற சூழலில் பாதாள சாக்கடைத் திட்டத்தைப் போன்று அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், இப்போது பெரிய அளவில் அந்தப் பேரூராட்சிகள், நகராட்சிகளுக்குத் தேவைப்படுகிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு முன்னுரிமை தந்து மற்ற திட்டங்களையும் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தெரிவித்ததுபோல், புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற நகராட்சிகளுக்கு சிறப்பு முன்கவனம் செலுத்தி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு, நிதிகள் ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெறும். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

முற்பகல் 10—20

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். நகராட்சி நிருவாகத் துறையில் முக்கியப் பணியாகக் கருதப்படுவது பாதாள சாக்கடைத் திட்டம் ஆகும். மதுரை மாநகராட்சியின் விரிவுபடுத்தப்பட்ட தென் பகுதியின் 13 வட்டங்களில் விரிவான திட்ட அறிக்கை நிலையிலேயே பணிகள் உள்ளன.

அம்மா அவர்களின் கடந்த ஆட்சியின்போது, மதுரை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் இன்றைய நம்முடைய வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் உட்பட பல பேரின் வேண்டுகோளுக்கிணங்க, மதுரை மாநகராட்சியின் வட பகுதியில் உள்ள விரிவாக்கப்பட்ட பகுதியிலே AMRUT திட்டத்தின்கீழ்,

2022 ஜனவரி 6]

அந்தத் திட்டம், அம்மா ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டம் இன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனைப் போன்று மதுரையின் தென் பகுதியில் இருக்கின்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியில், ஒரே ஒரு வார்த்தையில், என்ன வேண்டுமென்று விஷயத்தைச் சொல்லுங்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், விரிவுபடுத்தப்பட்ட அந்த நகராட்சிப் பகுதியின் 13 வட்டங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரைவுபடுத்தி, மதுரை மாநகராட்சி மக்களுக்காக செயல்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கின்ற உத்தரவு என்பது ஒவ்வொரு பெருநகரத்திலும் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகள், ஏற்கெனவே தொடங்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்ற பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மட்டுமல்ல, மழை நீர் வடிகால்கள் மற்றும் குடிநீர் வசதி அனைத்தையுமே நிறைவு செய்து தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்தளவு 13 வட்டங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே,* AMRUT *திட்டத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதை நீட்டித்து, மீண்டும் அதற்கென்று தனியாக ஒரு திட்டம் தயாரித்து, அந்தப் பகுதிகளும் இணைக்கப்பட்டு, பாதாள சாக்கடைத் திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி

*467—**திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—